மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 800 குடும்ப அட்டைகளுக்கு மேல் இணைக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடைகளில் அவற்றில் 500 கார்டுகளுக்குக் குறையாமலும், 800–க்கு மிகாமலும் குடும்ப அட்டைகள் இருக்க வேண்டுமென்று திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. பகுதிநேரக் கடைகளுக்கு இன்னும் குறைந்த அளவே இருந்தால் போதும் என்ற நிலையிலே, 200 குடும்ப அட்டைகளாவது இருக்க வேண்டும் என்று இணைக்கப்பட்டிருக்கிறது. எங்கெங்கு இன்னும் பகுதிநேரக் கடைகள் தேவை என்று மக்களிடமிருந்தும், மக்கள் பிரதிநிதிகளிடமிருந்தும் கோரிக்கை வருகிறதோ, அங்கெல்லாம் பகுதிநேரக் கடைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவர்கள் ஆய்வு செய்து அவற்றிற்கு அனுமதி தரலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை அரசு பரிசீலித்து எங்கெங்கு தேவையோ, அங்கு பகுதிநேரக் கடைகள் அதிகமாகத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 44, திரு. கே.எஸ். தென்னரசு. மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

44—

தனி மகளிர் நீதிமன்றம்

***19405—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலும், கோவையிலும் தனி மகளிர் நீதிமன்றம் அமைத்ததுபோல் ஈரோட்டிலும் தனி மகளிர் நீதிமன்றம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சென்னையிலும், கோவையிலும் தனி மகளிர் நீதிமன்றம் அமைத்ததுபோல் ஈரோட்டிலும் தனி மகளிர் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

2004 ஜூலை 28]

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டந்தோறும் முதன்முதலாக அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் துவங்கியும், பல இலட்சக்கணக்கான பெண்களை மகளிர் சுய உதவிக் குழுக்களில் இணைத்தும், இந்தியாவிலேயே தமிழகத்தில் முதன்முதலாக பெண் commando படையை அமைத்தும், அதிகமான பெண் சட்டமன்ற உறுப்பினர்களை இந்த மாமன்றத்திற்கு அனுப்பியும், தமிழகத்தில் முதன்முதலாக ஒரு பெண் தலைமைச் செயலாளரை நியமித்தும், தமிழகத்திலே முதன்முதலாக வஃக்பு வாரியத்தின் தலைவராக ஒரு பெண்ணை நியமித்தும், பெண்ணினத்திற்குப் பெருமை சேர்த்துத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், இதனை மறுபரிசீலனை செய்து, பெண்ணுரிமை காத்த தந்தை பெரியார் பிறந்த மண்ணில் ஒரு தனி மகளிர் நீதிமன்றம் அடுத்த நிதியாண்டிலாவது அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, மக்கள் வாழ்வதற்குரிய ஒரு அமைதியான சூழ்நிலையை உருவாக்கித் தந்தவர், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தியா என்று சொல்லும்போது, மகளிருக்கு எதிரான குற்றங்களை ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில்தான் மிக, மிக, மிக, மிகக் குறைவு. எனவே, அப்படி மகளிருக்கு எதிரான குற்றங்கள் நடைபெறும்போது, அவற்றை விசாரித்து உடனடியாக நியாயம் வழங்கி, நீதி வழங்கி, தீர்ப்பு வழங்கப்பட வேண்டுமென்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசினுடைய கொள்கை. எனவேதான் சென்னை, கோயம்புத்தூர் மட்டும் அல்லாமல் மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம் போன்ற பகுதிகளில்கூட மகளிர் நீதிமன்றம் அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய ஆர்வத்தை நான் பாராட்டுகின்றேன், மதிக்கின்றேன். பொதுவாகவே, அவருடைய ஈரோடு தொகுதி என்று சொல்லும்போது அந்த மாவட்டத்திலே கிட்டத்தட்ட 31–12–2003 வரை பதியப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 116 மட்டுமே. எனவே, குறைந்த எண்ணிக்கைக் கொண்ட 116 வழக்குகளுக்கு ஒரு மகளிர் நீதிமன்றம் அமைப்பது சாத்தியமில்லை. உண்மையிலேயே அந்தக் குற்றம் குறைவு என்று நினைக்கும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சிகொள்ள வேண்டுமேயொழிய குற்றங்களுக்காகவே நீதிமன்றம் வர வேண்டுமென்று எதிர்பார்க்கக் கூடாது என்பதுதான் என்னுடைய பதில் என்று சொல்லி அமைகின்றேன்.